**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 91 /2021 PW . 6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அனீஷ்பாத்திமா | தந்தை/கணவர் பெயர்: | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : மருத்துவர் |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.03.2026

---

**(1,2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர்)**

**18.03.2026 முதல் விசாரணை:**

1. நான் தற்போது துவரங்குறிச்சி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.10.2020ம் தேதியன்று இரவு 10.05 மணியளவில் துவரங்குறிச்சி மருத்துவமனையில் பணியில் இருந்த போது சிவகங்கை மாவட்டம் , சிங்கம்புணரி தாலுகா கே. இடையப்பட்டி கிராமம் கருப்பையா மகன் முத்துராமன் வயது –30 என்பவர் உறவினர் உதவியோடு சிகிச்சைக்கு வந்தார்.

2. வந்தவரை விசாரித்த போது அடையாளம் தெரிந்த மூன்று நபர் 06.10.2020ம் தேதி இரவு 07.30 மணிக்கு கைகளாலும், இரும்பு கம்பியாலும் தன்னை தாக்கியதாக கூறினார். இடது முன்னகையில் சிறிய கிழிந்த காயம் , நெஞ்சு வலி இருப்பதாக கூறினார். மேற்படி நபரை சிசிக்சைக்கு அனுமதித்து சிகிச்சை அளித்து சிகிச்சைக்கு பின்னர் அவருக்கு ஏற்பட்ட காயம் சிறு காயம் என்று சான்று வழங்கினேன் . **(விபத்து பதிவேட்டில் நான் வழங்கிய காயக்கருத்துரை அ .த.சா.ஆ–3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. வழக்கு சம்மந்தமாக சார்புஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

3. சிகிச்சைக்கு வந்த காயம்பட்ட நபர் அடையாளம் தெரிந்த 3 நபர்கள் என்று என்னிடம் கூறினார். ஆண்களா, பெண்களா என்று கூறவில்லை. ஆண்கள் எத்தனை பேர், பெண்கள் எத்தனை பேர் என்று கூறவில்லை . என்றையை தினத்தில் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன் என்றால் அன்றையை தினமே பரிந்துரை செய்தேன். நான் பணி செய்த மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெறவில்லை. மணப்பாறை அரசு மருத்துவமனையில் இருந்து என்றையை

தினம் காயம் பட்ட நபர் சிகிச்சைக்கு சேர்ந்து விடுவிக்கப்பட்டார் என்று நான் அறிக்கை பெற்று காயக்கருத்துரை வழங்கவில்லை . காயம்பட்ட நபர் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை . காயம்பட்ட நகர் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்றாரா என்று எனக்கு நேரடியாக தெரியாது . தொடர் சிகிச்சை பெறாமல் தன்னிச்சையாக சென்றதால் நான் சான்று வழங்க இயலாது என்றால் சரியல்ல. 1ம் வது காயமானது சாதரணமாக தடுமாறி கீழே விழும் போது ஏற்பட வாய்புண்டு என்றால் சரிதான் . 2வது காயமானது பாசாங்கமாக கூட இருக்கலாம் என்றால் சரிதான்.